1 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 10உ புதன் (22-2-56) ★ ★ வெளியூர்: மாசி 11உ வியாழன் (23-2-56) [இதழ் 214

அன்றும் இன்றும்!

1938-ல் ஒரு பிரிட்டிஷ்காரர் ஆண்டொன்றுக்கு 5,000 பவுன் சம்பாதித்தால் அதைக்கொண்டு அப்போது பெறக்கூடிய வாழ்க்கைத்தரத்தை இப்போது பெறுவதற்கு ஆண்டொன்றுக்கு 75,000 பவுன் சம்பாதிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் நிதி இலாகா செயலாளர் ஹென்றி ப்ருக் தெரிவித்திருக்கிறாராம்.

பொது வேலைநிறுத்த எதிரொலி!

கோவிந்தசாமி, எம். எல். ஏ. மீது கொள்ளை வழக்கு

மற்றும் எழுவருக்கும் 15 நாள் 'ரிமாண்ட்'

கடலூர், பிப் 21—

தோழர் ஏ கோவிந்தசாமி எம் எல். ஏ., மற்றும் ஏழு பேர் மீதும் இ. பி. கோ. 395-வது பிரிவுப்படி கொள்ளையிட்டதாகவும், கடையைச் சூறையாடியதாகவும் போலீசார் வழக்குப் பதிவு செய்திருக்கின்றனராம்.

பிப். 20-ந் தேதியன்று கடலூரில் அனுசரிக்கப்பட்ட பொது வேலைநிறுத்தத்தை ஒட்டி சுமார் 120 பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

ஆறுமுகம் என்பவரது பூக்கடையிலிருந்து ரொக்கமாக ரூ. 166—10—6 சூறையாடியதாகவும், கடையிலிருந்த ரூ. 800 பெறுமான சொத்துக்களுக்கு நாசம் விளைவித்ததாகவும் தோழர் ஏ. கோவிந்தசாமி உள்ளிட்ட எட்டு பேர் மீது போலீசார் குற்றம் சுமத்தியிருக்கின்றனராம்.

தோழர் ஏ. கோவிந்தசாமியும், இதரரும் 15 நாளைக்குக் காவலில் வைக்கப்பட்டிருப்பர் என்று தெரியவருகிறது.

மேலும் விபரங்கள் அடுத்து கிடைத்ததும் தரப்படும்.

கேவல்சிங் முகத்தில் அசடு வழிந்தது

புதுவை அர்த்தால் ஊர்வலத்தில் பாரதிதாசன்

புதுவையில், அர்த்தால் எதிர்பார்த்ததற்கும் அதிகமாக வெற்றியுடன் நடந்தேறியிருக்கிறது; ஆலைகள், கடைகள், பள்ளிகள் எவையுமே திறந்திருக்கவில்லை. பிரதம கமிஷனரான கேவல்சிங், நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு நகரின் அமைதியால்—அர்த்தால் பெற்ற வெற்றியால், முகத்தில் அசடுவழிய மாளிகைக்குத் திரும்பிச் சென்றிருக்கிறார்.

புதுவை சர்வகட்சிக் கூட்டணியினர் வேண்டுகோளுக்கிணங்க, புதுவைப் பெருமக்கள் கடை அடைப்பும், பொது வேலைநிறுத்தமும் வெற்றிகரமாக நடைபெற உதவி செய்தனர்.

சனிக்கிழமை மாலை முதல், சில காலிகள் கடைகளைத் திறந்து வைக்கும்படி பயமுறுத்தி வந்தும், குபேர் போன்ற சில மந்திரிகளும், அரசாங்க அறிக்கையும் கடைகளைத் திறக்கும்படி கேட்டுக்கொண்டும் பயனில்லாது போயிற்று.

வீடுகட்குச் சென்று பயமுறுத்தல் செய்து வற்புறுத்தித் தம் காரிலேயே அழைத்து வந்து, ஒரு ஜவுளிக்கடை, ஒரு மளிகைக்கடை மட்டும் திறக்கச் செய்தனர்; அவர்களும் பிற்பகல் மூடிவிட்டனர்.

புதுவையைச் சேர்ந்த பல ஊர்களிலும் வேலைநிறுத்தமும், கடை அடைப்பும் வெற்றிகரமாகவே நடைபெற்றிருக்கின்றன. ஒருசில மலபார் டீ ஓட்டல்கள் மட்டும் ஆங்காங்கே திறந்திருந்தன. இவ்வளவு நிகழ்ச்சிகளிலும் எங்கும் கலவரங்கள் சிறிதும் இல்லாதது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்று மாலை 4 மணிக்கு, மாபெரும் ஊர்வலம் ஒன்று, மக்கள் கான சபாவிலிருந்து புறப்பட்டுப் பல வீதிகள் வழியாகச் சென்று இறுதியில் செஞ்சிச் சாலைத் திடலையடைந்தது; அங்கு வழக்கறிஞர் திரு. ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கிற்று.

புதுவை சர்வகட்சிக் கூட்டணியின் தலைவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், வேலைநிறுத்தம் — கடை அடைப்பு இவற்றை வெற்றிகரமாக நடத்தித் தந்த பொதுமக்களுக்கும், வியாபாரிகட்கும், தொழிலாளர்கட்கும், மாணவர்கட்கும் நன்றிகூறி, சர்வகட்சிக் கூட்டணியில் பங்கு பெற்றுள்ள அறிஞர்களையும், பல்வகைக் கட்சியினரையும் பாராட்டிப் பேசினார்.

பின்னர், கூட்டணியினர் வெளியிட்டிருந்த உறுதிமொழி, தமிழிலும், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளிலும் வாசிக்கப்பட்டன. மக்கள் எல்லோரும் எழுந்து நின்று அவ்வுறுதி மொழியை ஏற்றனர்.

பின்னர், வி. சுப்பையா, வழக்கறிஞர் சு. பெருமாள், சட்டசபை உறுப்பினர் உசேன், கோவிந்தராசநாயகர், ம. நோயேல், ச. சிவப்பிரகாசம், கு. முருகையன் ஆகியோர் தனிப்பட்ட முறையிலும், தத்தம் கட்சிகள் சார்பிலும் பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட பின் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

கராச்சியிலிருந்து சென்ற விமானம்

பாலைவனப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கி 44 - பேர் பலி

கெய்ரோ, பிப் 20—

கராச்சியிலிருந்து 55 பேரை ஏற்றிச் சென்ற விமானம் ஒன்று, கெய்ரோவிலிருந்து 20-வது மைலில் பாலைவனப் பகுதியில் நொறுங்கியது. முதலில் கிடைத்த செய்திகளின்படி 12 பேர் தப்பிப் பிழைத்தனர்; இவர்களில் இரு குழந்தைகளும் உள்ளன. மாண்டவர் 44 பேர்களென கெய்ரோ விமான நிலைய அதிகாரிகள் அறிவித்தனர்

தமிழர் இலட்சியத்திற்கு மலையாள காங்கிரஸ்காரர் ஆதரவு

ஆலைத் துணிகளுக்கு!

ஒருமுனை விற்பனை வரியாம்

கோவை, பிப். 19—

"ஆலைத்துணிகளுக்கு இவ்வருட ஏப்ரல் மாதம் முதல், ஒருமுனை விற்பனை வரி வசூலிக்கப்படும். இவ்வரியை மத்திய சர்க்கார் 'எக்சைஸ்' வரியுடன் வசூலிக்கும்,"

என்று, சென்னை நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் கோவை 'இந்திய வர்த்தக சங்க தூதுக் குழு'விடம் பேசுகையில் கூறினார்.

தேவிகுளத்தில் 50,000 தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

மூணார், பிப். 20—

தேவிகுளம் தாலுக்காவில், தமிழக சர்வகட்சிக் கூட்டணி வேண்டுகோளுக்கு இணங்க சுமார் 50,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

தாலுக்கா முழுவதிலும் அர்த்தால் மிக வெற்றிகரமாக—அமைதியாக நடைபெற்றிருக்கிறது.

பிரபல கேரள காங்கிரஸ்காரரும் முன்னாள் சட்டசபை உறுப்பினருமான மரக்காயர் என்பவர் தமிழர்தம் இலட்சியத்தில் அனுதாபம் கொண்டு தமது கடையை மூடிவைத்திருந்தார்.

வட்டாரம் முழுவதிலும் நடைபெற்ற பூரண வேலைநிறுத்தத்தில் எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை.

தி. மு. கழக சுவரொட்டி கண்டு கேரள சர்க்கார் அச்சம்!

நாகர்கோவில் பிப். 18—

நாகர்கோவில் நகரின் எல்லா இடங்களிலும் பொது மக்களின் பார்வைக்காக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக தொங்க விடப்பட்டிருந்த 'ஆசியாவின் ஜோதி அளித்திடும் நீதி' என்ற போர்டுகளை உடனே அந்தந்த இடங்களிலிருந்து அகற்றிவிடுமாறு நாகர்கோவில் தலைமைப் போலீஸ் அதிகாரி (ஏ. எஸ். பி.) உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிகிறது. இந்த உத்தரவு கிடைத்ததும் மணிமேடை சந்திப்பிலிருந்த மேற்கண்ட போர்டு ஒன்றை போலீசார் உடனடியாக அகற்றினர்.

இன்னும் சில தினங்களுக்குள் நகரிலுள்ள மேற்கண்ட எல்லா போர்டுகளும் அகற்றப்பட்டு விடுமெனத் தெரிகிறது.

'ஆசியாவின் ஜோதி அளித்திடும் நீதி' என்ற சுவரொட்டிகளின் ஏராளமான பிரதிகள் இங்குள்ள தி. மு. க. கிளை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த சுவரொட்டியின் மத்தியில், தமிழ் விவசாயி கண்ணீர் விடுவது போன்றும், தமிழகம் என்பது ஒரு பெண்ணாகவும், தமிழகத்தை நேருஜி அடக்கியாண்டு வருவது போலவும் காட்டப்பட்டுள்ளது. பெண்ணாகக் காட்சியளிக்கும் தமிழகத்தை, நேருஜி ஒரு வாளால் வெட்டப் போவதுபோல் படத்தில், சித்தரிக்கப்பட்டுள்ளது.

நேருஜியின் வாள் வீச்சுக்குப் பயந்து தமிழகமான பெண் தலைவிரி கோலமாக (கண்ணீரும் கம்பலையுமாக) பயந்த நிலையில் இருப்பதாக அந்தப் படத்தில் காட்டப்படுகிறது.

இந்த சுவரொட்டிகள் நகரின் பல இடங்களில் ஒட்டப்பட்டதும், போலீசாருக்கு இந்த விபரம் அறிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது. உடனே ஏ. எஸ். பி., அந்த போர்டுகள் எல்லாவற்றையும் அகற்றி விடுமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேற்கண்ட போர்டுகள் முழுவதுமாக இன்னும் அகற்றப்படவில்லை. இன்னும் சில தினங்களில் போலீசாரே இந்த போர்டுகளை அகற்றும் வேலையில் ஈடுபடுவர்.

15,000 தங்கவயல் தொழிலாளர் பொது வேலைநிறுத்தத்தில் பங்கு பெற்றனர்

பிப். 20-ல், சாம்பியன் ரீப்ஸ் சுரங்கத் தொழிலாளரும், மைசூர் மைன் சுரங்கத் தொழிலாளரும் பூரண வேலை நிறுத்தம் செய்தனர். எல்லாத் தொழிற்சங்கங்களின் சார்பிலும் சுமார் 15,000 பேர் வேலை நிறுத்தம் செய்தனர்.

காங்கிரசாரால் நடத்தப்படும் நந்திதுருகம் சுரங்கத் தொழிற்சங்கம் இந்த அர்த்தாலை எவ்வெவ்வகைகளில் முறியடிக்க முடியுமோ அவ்வளவு வழிகளையும் கையாண்டு பார்த்தும், 1,000 தொழிலாளருக்கு மேல் வேலைக்குச் செல்லவில்லை.

ஆண்டர்சன்பேட்டை, இராபர்ட்சன்பேட்டையிலுள்ள எல்லாக் கடைகளும் பரிபூர்ண வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன. இராபர்ட்சன்பேட்டையில் சில 'காங்கிரஸ் விபீஷணர்'கள் போலீசின் உதவிகொண்டு ஓரிரண்டு கடைகளைத் திறந்துவைக்க முயன்றனர். பெரும்பாலான கடைகளெல்லாம் அன்று மூடப்பட்டே கிடந்தன.

ஆண்டர்சன்பேட்டை தி. மு. கழகம் எடுத்துக்கொண்ட இந்த முயற்சியில் கம்யூனிஸ்டுக் கட்சியும், ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனமும், சாம்பியன் ரீப்ஸ் மைசூர் மைன்ஸ் தொழிற்சங்கங்களும், டைரி யூனியனும், நகர சுத்தித் தொழிலாளர் சங்கங்களும், தமிழரசுக் கழக அனுதாபிகளும் மிகப் பெரும் அளவிற்கு ஒத்துழைத்து கூட்டணி அமைத்துப் பொது வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தினர்.

அன்று மாலை மைசூர் மைன்ஸில் தொடங்கின ஊர்வலம் நந்திதுருகம் சென்று, தங்கவயல் உயர்நிலைப்பள்ளியை அடைந்து, அங்கு ஓர் பொதுக்கூட்டம் நடத்தியபின் கலைந்தது.

கூட்டத்திற்கு தோழர் கே. எஸ். வாசன் எம். எல். ஏ தலைமை வகித்தார். தோழர்கள் மா. செஞ்சேரலாதன், வி. எம். கோவிந்தன், கே. ஜி. சின்னராசன், என். ஆ. அருள்தாசன், என். சவரிதாஸ், முத்துக்குமார் முதலியோர் பேசினர்.

எட்டு ஆண்டுகளாக மலேயாவில் கம்யூனிஸ்டு கலகக்காரர்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர ஆசிய நாடுகளின் மத்தியஸ்தத்தை தான் வரவேற்பதாக மலேயா முதன் மந்திரி கூறியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 22—2—'56 ' நன்

அடக்குமுறை தாண்டவம்

சர்வகூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்நாடு எங்கணும் வேலை நிறுத்தம் அமைதியான முறையில் நடைபெற்று இருக்கிறது.

தமிழ் மக்கள்பால் கூட்டணித் தலைவருக்கு இருக்கும் உறுதியான நம்பிக்கையை, தமிழர்கள் வேலை நிறுத்தத்தின் மூலம் மெய்ப்பித்துக் காட்டிவிட்டனர்.

'பிறருக்குக் கேடு சூழும் கொடுவினையை எம் தமிழர் உள்ளத்தாலும் உள்ளார்' என்று கூட்டணித் தலைவர் கொடுத்த வாக்குறுதியை, தமிழ் மக்கள் செயலாற்றிக் காட்டிவிட்டனர்.

'வேலை நிறுத்தத்தில் அமைதி கெடும்—நாசவேலைகள் தலைகாட்டும்—அதனையே ஒரு புகலாகக் கொண்டு சர்வகட்சியினரை வச இடங்கிடைக்கும்' என எதிர்பார்த்துக்கிடந்த தேசிய ஏடுகள் ஏமாற்றம் அடைந்துவிட்டன.

'இதுகள் சொன்னால் எவர் கேட்பர்? இவர்கள் பேச்சை தமிழ் மக்களா மதித்து நடக்கப் போகின்றனர்? வேலை நிறுத்தமாவது நடைபெறுவதாவது? வீண் முயற்சி! வெறும் பகட்டு! விருதா சலசலப்பு!' என்று தமிழ் மக்கள் செயல்திறத்தையும், கூட்டணித் தலைவர்கள் கட்டளைக்குத் தமிழர் வைத்துள்ள மதிப்பும் அறியாது, எழுத்துக் கூலிகள் சில, கூட்டணியைக் கேலி செய்தன—நையாண்டி புரிந்தன — அதனால் கூட்டணியே சரிந்துவிடப் போவதாகக் கற்பனைச் செய்து கொண்டு கொக்கரித்தன— உள்ளம் பூரித்தன!

வேலை நிறுத்த வெற்றி கேட்டு, அதுகளின் முகங்களில் அசடு வழிகின்றன—உடல் வியர்க்கின்றன — வாடிக்கையான வசைபாடிக் கிடக்கின்றன!

'வேலை நிறுத்தம் வெற்றி பெருது — வழக்கம்போல் தொழில்கள் நடைபெறும்; தொழில் நிலையங்கள் திறந்து கிடக்கும்; எட்டிக்குப்போட்டியாகத் தமிழ் மக்கள் நடந்து கொள்வர்' என்றும் சில அரசியல் ஆருடக்காரர் எதிர்பார்த்துக் கிடந்தனர். அதுபோல் விளைவு இருந்தால் 'வேலைநிறுத்தம் பிசுபிசுத்தது' என வெளியிட்டு மகிழலாம்; முதலமைச்சர் மனம் மகிழ எடுத்துக் காட்டி அத்தாட்சியும் பணிக்கேற்ற பரிசுகளும் பெறலாம் என எண்ணமிட்டுக் கிடந்தவர்கள், ஏமாற்றமுற்றனர் — குறைந்த அளவில் அல்ல— பெரிய அளவில்!

தேசிய ஏடுகளே மறைக்க முடியாமல் வேலை நிறுத்தச் செய்திகளை வேண்டாவெறுப்புடன் வெளியிடுகின்றன பத்திப் பத்தியாக! உண்மையைத் திரித்தும், பொய்யைக் கூட்டியும், அப்பணியினைப் புரிகின்றன அவ்வேடுகள்!

அவைகளில் ஒன்றுங்காவது, 'கடைகள் மூடப்படவில்லை— என்றும்போல் ஆலைகள் இயங்கின—வழக்கம்போல் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் இருந்தன' என்று எழுதுகின்றன புத்தி இருந்திடக்காணும். செய்திகளை — மாசுகற்பித்தாவது — குறைத்தாவது — வெளியிட்டுள்ளன! தங்களை ஆதரித்து போஷிக்கும் தமிழ் மக்களுக்கு இந்த அளவு நன்றியாவது காட்ட வேண்டாமா என்ற நன்றி உணர்வு போலும் அவைகளுக்கு!

'சுதேசமித்திரன்' பொதுவாக வேலைநிறுத்தங்களில் காணப்பட்ட அமைதியையும், தமிழ் மக்கள் காட்டிய ஆர்வத்தையும், பொறுமையையும் பாராட்டியே எழுதிவிட்டது.

அது, இது—

"நேற்று தமிழ் நாட்டில் ஹர்த்தால் கூடியவரை அமைதியாகவே நடந்தேறியது. ஒரு சில இடங்களில் மட்டும் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டது. ஒரு ஸ்தலத்தில் துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது துக்ககரமானது. ஆனாலும் மொத்தத்தில் ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்தவர்கள் கூடியவரை முன் ஜாக்கிரதையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களது எண்ணப்படி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தேறியது பற்றி அவர்கள் திருப்தி அடைவது இயற்கை."

அமைதிக்கு எந்தவகையிலும் பங்கம் ஏற்படக்கூடாது என்பதற்காகப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர், கூட்டணித் தலைவர்கள். அம்முயற்சியை, பொதுவாக வேலை நிறுத்தங்களிலிருந்து வெளியான சம்பவங்கள் உறுதிசெய்கின்றன.

அமைதியாக வேலைநிறுத்தம் நடைபெற வேண்டுமென்பதில் கூட்டணித் தலைவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டுங்கூட, சிற்சில இடங்களில், சிறு சிறு அளவில் அதற்கு ஊறு ஏற்பட்டு இருக்கிறது. அதற்குக் கூட்டணித் தலைவர்களின் கவலைக் குறைவைப் பொறுப்பாக்க சித்தசுவாதீனமுடையவர்கள் எவரும் முன்வரமாட்டார்கள்.

அந்த விரும்பத்தகாத அமைதிச் சிதைவுக்கு அரசாங்கமும், முதலமைச்சர் ஏவல்படி ஆடும் சில எடுபிடிகளும்தான் முழுதும் பொறுப்பாகும்.

கூட்டணித் தலைவர்கள் எந்தெந்த ஊரில், வேலைநிறுத்தத்திற்கு முன்தினமே முன்கூட்டியே கைது செய்யப்பட்டிருக்கிறார்களோ அங்கெல்லாந்தான் அமைதிக்கு ஆட்டங்கண்டிருக்கிறது. எனவே, சிற்சில இடங்களில் ஏற்பட்டுள்ள அமைதிக் கேட்டுக்கு முழுதும் பொறுப்பேற்க வேண்டியவர் முதலமைச்சரேயாவார்.

கூட்டணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதின் காரணமாக, போலீஸ் அதிகாரிகள் மீது பொதுமக்களுக்கு ஒருவிதமான அருவருப்பு ஏற்படுவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். அதையே ஒரு புகலாகக்கொண்டு, பொது மக்கள்மீது தடியடி கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம் செய்ய போலீசும் முனைந்துவிடுகிறது.

அதன் பிறகு அமைதியா நிலைக்கும்? அமளிதான் எங்கும் காட்சி தரும்!

சிற்சில ஊர்களில் நடைபெற்ற வேலைநிறுத்தங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு, அவ்வப் வகுதிகளில் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த போலீஸ் அதிகாரிகளின் போக்குத்தான் முக்கிய காரணமாகும். எனவே, அதிகாரிகள் வீசிய அடக்குமுறைகளுக்கு முதலமைச்சர்தான் பதில் கூறியாக வேண்டும்.

வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென்பது முதலமைச்சரின் உள்ளக் கிடக்கை.

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும், பாதுகாப்பதிலும் அவருக்குத் துளியும் அக்கரையே இல்லாத காரணத்தினால், முதலமைச்சரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து வேலைநிறுத்தத்தைக் கைவிட கூட்டணித் தலைவர்கள் ஒப்பவில்லை. அதனால் ஏமாற்றமும், எரிச்சலும் அடைந்த முதலமைச்சர், வேலை நிறுத்தத்தை முறியடிக்கக் கூடிய முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ள முன்வந்தார்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட கூட்டணியினரை முன்கூட்டியே கைது செய்து காவலில் வைத்துவிட்டார். அதன் பிறகு பொதுமக்களைத் தடி கொண்டு தாக்கியுள்ளார். கண்ணீர்புகை குண்டு போட்டு மக்களின் கண்களைப் பிசைய வைத்திருக்கிறார்.

துப்பாக்கிப் பிரயோகமும் கள்ளக்குறிச்சியில் செய்திருக்கிறார். நால்வர் படுகாயமும் பட்டுள்ளனர். அடக்குமுறைகளை வீசுவதில், 'பச்சைத் தமிழர்' கனம் காமராசர், அன்பர் ஆச்சாரியாரை வெட்கித் தலைகுனியச் செய்துவிட்டிருக்கிறார்!

ஏகாதிபத்தியம் உண்டாக்கிய தியாகத் தழும்பு ஒன்றை மட்டுமே காட்டி, ஆட்சிபீடத்திலேறியுள்ள முதலமைச்சர் காமராசர், அவரை அப்பதவிக்கு உயர்த்திய தமிழ் மக்களை நாடி பிடித்துப் பார்க்கக் கிளம்பி இருக்கிறார். தடிகொண்டு தாக்கி இருக்கிறார்! துப்பாக்கிக் கொண்டு சுட்டு இருக்கிறார்!

தமிழர் நலத்தைக் காக்க, தமிழர் உரிமையை வாதிட்டுப் பெற வக்கில்லையானாலும், தமிழர்களைத் தடிகொண்டு தாக்கவும், துப்பாக்கியால் சுட்டுத் தள்ளவும் கனம் காமராசர் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு முச்சந்திக்கு வந்துவிட்டிருக்கிறார். முதல் மந்திரி என்ற போக்கில், அச்சுறுத்தக் கிளம்பி இருக்கிறார். அவர் ஆசையும் தீர்ந்துபோகட்டும்!

தமிழ் மக்கள் உரிமையை இழந்துவிட்டு, நியாயமான பகுதிகளைப் பறிகொடுத்துவிட்டு, நல்வாழ்வைத் துறந்துவிட்டு, நாயினும் கடையராய் நலிந்து வாழ்வதைவிட, 'பச்சைத் தமிழர்' கரங்களால் தடியடிபட்டு சுடப்பட்டு சாவது மேல்! அதனால் வீரமும், மானங் காத்த பெருமையும் தமிழ் மரபிற்கு நிலைத்தாவது நிற்கும்! நடக்கட்டும், கனம் காமராசர் தடியடி தர்பார்! இன்னும் சில நாளைக்கு நடக்கட்டும!

நல்லறிவாளர் மறைந்தார்

மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவராயிருந்த ஆச்சாரிய நரேந்திர தேவ் தமது 67 வயதில் இயற்கை யெய்தினார் என்ற சோகச் செய்தி இந்தியாவின் அரசியலில் ஈடுபாடு கொண்ட அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது.

தமது 27-வது வயதிலிருந்து அரசியலில் ஈடுபட்டு 30 ஆண்டுகளாக உழைத்த உத்தமர்.

இந்தியாவில் சோஷலிஸ்டு கட்சியின் அமைப்பாளர்களிலே ஒருவர். வெள்ளையருக்கெதிராக காங்கிரசார் நடத்திய பெரும் போராட்டங்களில் பங்கு பெற்றவர். உண்மையான நாட்டுப் பற்றும் நேர்மையான அரசியல் வாழ்வும் கொண்டவர்.

அரசியல்வாதியாக மட்டுமின்றி அவர் இலட்சுமணபுரி, காசி பல்கலைக் கழகங்களின் துணை வேந்தராயிருந்து அரிய பணிபுரிந்த பெரும் போராசிரியருங்கூட.

குடியரசுத் தலைவர் கூறியது போல, ஆசார்ய தேவின் மறைவு மகத்தான நஷ்டம் தான். இந்திய அரசியல்வாதிகளில் நேர்மையான தலைசிறந்த சிலருள் ஒருவராயும், நல்ல கல்விமானும் தன்னலமற்ற பொதுப் பணியாளருமான தேவின் மறைவு குறித்து துயருருவோருடன் நாமும் சேர்ந்துகொள்கிறோம். அவரது கூட்டுத் தோழர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

***

சர்வ கட்சி கூட்டணியின் நன்றி அறிவிப்பு

தலைவர் பி. டி. இராசன் அவர்களின் அறிக்கை

சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழ் நாடு எங்கணும் அர்த்தால் மிக வெற்றிகரமாக நடந்தேறியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக, சர்வ கட்சி கூட்டணியின் சார்பில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், உளம் பொங்கிய நன்றியையும், தமிழக மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். அர்த்தாலை வெற்றிகரமாக்கும் வகையில் பொதுமக்கள் அமைதியாகவும், கண்ணியமாகவும் நடந்துகாட்டியதும், போலீஸ் அதிகாரிகள் பொதுவாக நேர்மையாக நடந்து காட்டியதும் வரவேற்கத்தக்கனவாகும்.

நாம் திரும்பத் திரும்ப அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிறகும், சில வேண்டத்தகாத அசம்பாவிதங்கள் சிற்சில இடங்களில் நடந்தேறியிருக்கின்றன; அத்தகைய இடங்களில் போலீஸ் அதிகாரிகளும் அத்துமீறி நடந்துகொண்டிருந்திருக்கின்றனர்.

சர்வ கட்சிக் கூட்டணியின் செயலாளர்களுள் ஒருவரான தோழர் ப. ஜீவானந்தம அவர்களும், கம்யூனிஸ்டுத் தலைவர் எம். ஆர். வெங்கட்ராமன் அவர்களும், மக்களை வீதியிலிருந்து அமைதியாக அகற்றிக்கொண்டிருக்கும்போது, அவர்கள், போலீசாரால் தாக்கப்பட்டது, சர்வ கட்சிக் கூட்டணியினராகிய எங்களுக்கெல்லாம் மனவருத்தத்தைத் தருகிறது.

நிற்க, இந்த அர்த்தாலை வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடத்தித் தந்த தமிழக மக்களின் சார்பிலும், கூட்டணியில் சார்ந்துள்ள என் சகாக்களின் சார்பிலும் கூட்டணியின் முடிவுகளை அரசியலாருக்கு மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

1. 'தட்சிணப் பிரதேசம்' ஏற்படுவதைக் கைவிட வேண்டும்.
2. எல்லையில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழ் ராஜ்யத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
3. புதிய சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டும்.

என்ற கோரிக்கைகளைப் பரிபூரண ஹர்த்தாலின் மூலம் தமிழக மக்கள் வெளிப்படுத்திய உணர்ச்சியை அரசியலார் மதித்து, அதற்கேற்ப ஆவன செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கோரிக்கைகள் வெற்றி பெறும் வகையில் தமிழக மக்கள் எதிர்காலத்திலும் தங்களுடைய ஒத்துழைப்பைத் தர வேண்டுமென சர்வ கட்சிக் கூட்டணி சார்பில் நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை: 21-2-56.

பி. டி. இராசன்,
தலைவர்.

***

திருத்தணியில் பொது வேலைநிறுத்தம்

ஆந்திரப் பகுதியிலே சிக்கித் தவிக்கும் தமிழர்கள் பிப். 20-ம் நாளைச் சிறப்பாக நடத்தினார்கள் இந்தப் பகுதியிலே இன்றைய நிகழ்ச்சியைப் போல் இவ்வளவு சிறப்பாகப் பொதுவேலைநிறுத்தம் இதுவரை நடைபெற்றதே இடையாது.

போக்குவரத்துச் சாதனங்கள் அத்தனையும் நின்று, உணவு, சிற்றுண்டி, தேநீர் கடைகள் எல்லாம்

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசி விலை உயர்வு

'அனுமதிக்கமாட்டோம்' என அமைச்சர் அறிவிப்பு

உணவுப் பொருள்களின் விலைகள் சமீபத்தில் உயர்ந்தது பற்றி மக்கள் சபையில் கேள்விகள் பல கேட்கப்பட்டுள்ளன

'அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதற்கும்—விலை உயர்வுக்கும் சம்பந்தமில்லை' என்று கூறிய உணவு இலாகா துணை அமைச்சர் கிருஷ்ணப்பா, 'அப்போது அரிசியின் விலை இறங்கிக்கொண்டிருந்ததால், அதைத் தடுப்பதற்காகவே ஏற்றுமதி அனுமதிக்கப்பட்டது' என்று கூறியுள்ளார்.

'அரிசி விலை உயருவதை சர்க்கார் அனுமதிக்கமாட்டார்கள்; வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்டிருந்தாலும் கூட, இந்த ஆண்டில் $7\frac{1}{2}$ சதவிகிதம் அரிசி உற்பத்தி அதிகரித்திருக்கிறது; எனவே, அரிசியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை' என்று தெரிவித்துள்ளார்.

பிப்ரவரி 20-பெற்ற பெரு வெற்றி

தமிழகம் தரும் நற்செய்தி

தமிழக சர்வ கட்சிக் கூட்டணியினர் வேண்டுகோளுக்கு இணங்க, டெல்லியின் அநீதிக்கு—நயவஞ்சகத்திற்கு—சதிக்கு எதிராகத் தமிழகமெங்கணும் பிப். 20-ந் தேதியன்று மகத்தான வெற்றியுடன் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

கடையடைப்பு, பஸ் போக்குவரத்து நிறுத்தம், பள்ளிகள், ஆலைகள் மூடுவிழா போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தின் எல்லா சிற்றூர்-பேரூர் நகரங்கள், பட்டிதொட்டிகளில் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. இட நெருக்கடி கருதி, அந்த நிகழ்ச்சிகளின் சாரத்தை மட்டும் இங்கு தருகிறோம்.

பல ஊர்களில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். முடிந்தவரையில் விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

திருமங்கலம்

நகரின் பல கடைகளும் மூடப்பட்டன. ஒருசில காங்கிரஸ் முதலாளிகள் முதலில் மறுத்தும், பின்னர் அவர்களாகவே கடைகளை அடைத்துக்கொண்டும் சென்றனர், கடைகளைத் திறக்கும்படி சில காங்கிரஸ்காரர்கள் கடைக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று வற்புறுத்தினர்; ஆனால், 'பொதுமக்களின் எதிர்ப்புகளுக்கு நாங்கள் ஆளாக மாட்டோம்' எனக் கூறி பல வியாபாரிகள் கடைகளைத் திறக்கவேயில்லை. 'விற்பனை வரி அதிகாரியை ஏவிவிடுவோம்; லைசென்ஸ் பறிபோகும்', எனப் பயமுறுத்தியும் பயனில்லாது போயிற்று. மொத்தத்தில் இந்நகரில் மிக அமைதியான முறையில் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது.

சென்னை - திருவொற்றியூர்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டுக் கிடந்தன. காலை 8 மணிக்கு திருவொற்றியூர் ஐரோட், டோல் கேட்டிலிருந்து சர்வகட்சி ஊர்வலம் துவங்கியது. விம்கோ தொழிற்சாலை, சிகரெட் பாக்டரி கே. சி. பி கம்பெனி, கார்போராண்டம், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. ஊர்வலத்தில் என்றும் காணாத அளவில் கட்சித் தோழர்களும், தொழிலாளர்களும், வியாபாரிகளும், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்புற—எந்தவித சிறு குழப்பத்திற்கும் இடமில்லாத வகையில், விம்கோ தொழிற்சாலைவரை சென்று, பின்னர் முக்கிய வீதிகள் வழியாக வந்து சன்னதித் தெருவில் கட்சிகளின் பிரதிநிதிகள் நன்றிகூற, 12-15 மணிக்கு முடிவுற்றது. நேஷனல் கார்பன் கம்பெனி, ராஜ் மெகானிகல் கம்பெனிகளில் மட்டும் வழக்கமபோல் காலையில் சங்கு ஊதியது: ஆனால், தொழிலாளர் யாரும் செல்லாதபடியால் பின்னர் தொழிற்சாலை மூடப்பட்டது. எல்லாக் கடைகளும்—குறிப்பாக மூட்டு சந்தைகளிலுள்ள சிறு அங்காடிக் கடைகளும் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

லால்குடி

லால்குடியிலும், சிறுதையூரிலும் சிறிய கடைகள் முதல் பெரிய கடைகள் வரை மூடியும், தொழில் நிறுவனங்களும் தொழிலாளர்களும் பொது வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தந்து கடைகளை மூடி ஒத்துழைத்தார்கள். மாணவர்களும், மற்றுமுள்ள பொதுமக்களும் அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டு அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் வெற்றிகரமாக நடத்திக்கொடுத்தனர். ஊர்வலம் முடிந்தவுடன் சர்வகட்சிக் கூட்டணியின் உறுதிமொழி வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பந்தநல்லூர்

இவ்வூர் சில்லரைக் கடை முதல் பெரிய மளிகை ஜவுளி முதலிய பலதிறப்பட்ட கடைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டிருந்தன.

இன்று அமைதியான முறையில் கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டு, வண்டி சங்கச் சார்பில், வண்டிகள் நிறுத்தப்பட்டு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி

ஹர்த்தால் அமைதியாக-வெற்றிகரமாக நடைபெற்றது. தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, தமிழரசுக் கழகத் தோழர்கள் சுமார் 15 பேர் 19-ந் தேதி இரவு 11-30 மணிவரை பஸ் தொழிலாளர்களைச் சந்தித்து வேலைநிறுத்தத்தில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டு வந்தனர். ஆனல். பஸ்களை ஓட்டுவதற்குப் போலீஸ் அதிகாரிகளும் முயற்சித்துக்கொண்டனர். நடு ரோட்டில் ஊழியர்களை மறித்து வானில் ஏற்றிச்சென்று போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருந்தனர். பிறகு இரவு 3-15-க்கு விடுவிக்கப்பட்டனர்.

பஸ் போக்குவரத்து ஒன்றும் நடைபெறவில்லை. கடைகள் ஓட்டல்கள் எல்லாம் மூடியிருந்தன. பள்ளி மாணவர்களை கேட்டுக்கொள்ளக்கூட அனுமதிக்கப்படவில்லை 'பள்ளிக்குப் போக வேண்டாம்' எனக் கேட்டுக்கொண்ட தோழரைக் கைது செய்து, பிற்பகல் விடுவித்தனர். முடி திருத்தும் தொழிலாளர் ஒருவர் கடையை மூடும்படி கேட்டுக்கொண்டதற்காக 'அவ்வாறு கேட்கக்கூடாது' என்று போலீசாரால் எச்சரிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி கண்டிராத அளவிற்குப் பெரிய ஊர்வலம் நடந்தது.

செல்லப்பம்பட்டி

இங்குள்ள 13 ஜவ்வரிசி உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டன. மளிகைக் கடைகள், காப்பிக் கடைகள், ஜவுளிக் கடைகள், சைக்கிள் கடைகள், முடி திருத்தும் நிலையங்கள் மற்றும் முக்கியமான கடைகள் அத்தனையும் மூடப்பட்டன. காலை 6 மணிக்கு தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. இளங்கோ, தோழர்கள் எஸ். பி குஞ்சு, கே. லோகநாதன் மற்றும் 7 தோழர்களை ரிசர்வ் லாரியில் ஏற்றி நாமக்கல் கொண்டுவந்தார்கள்; நாமக்கல் வந்ததும் தோழர்கள் கே. இளங்கோ, எஸ். பி குஞ்சு, கே. லோகநாதன் ஆகிய மூவரையும் கைது செய்து மற்ற ஏழு தோழர்களையும் ஊருக்கு அனுப்பிவிட்டார்கள்.

குடியேற்றம்

பூரண அர்த்தால் நடைபெற்றது; இதுவரை இந்த நகரத்தில் இம்மாதிரி வெற்றிகரமாக எப்பொழுதும் நடைபெற்றதில்லை என்று பொதுமக்கள் கூறினர். பஞ்சாலை, தீப்பெட்டி தொழில், கைத்தறி - நெசவு. பீடித்தொழில். சினிமா, பள்ளிகள், பஸ் போக்குவரத்து, பல தொழிலகங்கள் எல்லாம் அடைக்கப்பட்டு இடுகாட்டு அமைதியாகக் காட்சியளித்தது.

21 தோழர்கள் பகல் 12 மணிவரை கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 16 பேர் தி. மு. கழகம்; ஒருவர் தி. க.; 2 பேர் தமிழரசுக் கழகம்; சுயேச்சையாளர் 2 பேர்.

பறங்கிப்பேட்டை

இவ்வூர் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில, எம்.எல்.ஏ. தலைமையில 'கடைகள் திறக்கப்பட வேண்டும்' என்று நேரடியாகச் சொல்லியும் கூட வியாபாரிகள் ஒற்றுமையாகக் கடையடைப்பு செய்தது பாராட்டவேண்டியதாகும்.

திருச்செங்கோடு

நகரெங்கிலும் கடைகள் அடைக்கப்பட்டும், பெரும்பாலான மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமலும், தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமலும் இருந்து அர்த்தால் அனுஷ்டித்தனர். நகரில் கலவரம் ஏதாகிலும் ஏற்பட்டு விடுமோ என்பதற்காக முன்னேற்பாடாக நகர மக்கள் அர்த்தால் கமிட்டித் தலைவர் டி. எஸ். தங்கவேல், நகர தி. மு. கழகச் செயலாளர் டி. ஏ. நடேசன் உள்ளிட்ட 18 பேர்கள் 19-ந் தேதி இரவு 11 மணியளவில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இன்று நால்வர் கைது செய்யப்பட்டு 5 நாட்களுக்கு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நகரமெங்கிலும் அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது.

கோதண்டவிளாகம்

காலை 6 மணியளவில் கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, கோதண்டவிளாகம், நங்குடி, குமாரக்குடி, மழவார்ய நல்லூர் வீதிகளின் வழியாகச் சென்றது; நங்குடி, குமாரக்குடியில் கடைகள் மூடப்பட்டன; விவசாயிகள் வேலைக்குச் செல்லவில்லை; நங்குடி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை.

கொட்டம்பட்டி

காலை 4-30 மணியிலிருந்து பொது வேலைநிறுத்தம் செய்யப்பட்டது; கடையடைப்பு நடைபெற்றது; பாடசாலை மூடப்பட்டது; மோட்டார் முதலிய சாதனங்கள் அமைதியான முறையில் இடையூறுகள் ஏதுமின்றி நிறுத்தப்பட்டன; அதன் பொருட்டு 85 பேர்கள் சிறை சென்றனர். இதில் கலந்துகொண்ட ஊர்கள்—கொட்டாம்பட்டி, வைரிச்செட்டிப்பாளையம், நாகையநல்லூர், சோபனபுரம் முதலியனவாகும்.

சென்னிமலை

சர்வகட்சிக் கூட்டணி சார்பில், இவ்வூரில் காலை 9 மணிவரை பூரண அர்த்தால் நடைபெற்றது. பிறகு, உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் தலையிட்டு கடைகளைத் திறக்குமாறு நிர்ப்பந்திக்கவே, சிலர் கடைகளைத் திறந்து வைத்தனர். திறந்த கடைகளின் முன்பு சர்வகட்சித் தோழர்கள் 'தமிழ்ப் பகுதிகளை ஒன்று சேர்க்க வேண்டும்' என்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளை ஏந்தி கடைகளை மூடும்படி கோரினர்கள். உடனே போலீஸ் தலையிட்டு தோழர்களைக் கைது செய்தனர். பகல் 12 மணிவரை 23 பேர் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அர்த்தால் மிகவும் அமைதியாக நடைபெற்றது.

இடப்பாடி

எல்லாக் கடைகள், தொழிற்சாலைகள், உணவு விடுதிகள் மூடப்பட்டன; பஸ்கள் நகரவில்லை; பள்ளிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை; நூறு சதவிகிதம் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது; 24 பேர்கள் கைதாயினர்.

தொட்டம்பாளையம்

கீழ்பவானி அருகிலுள்ள தொட்டம்பாளையம் தி. மு. கழகத் தோழர்களால் அமைதியாகவும், கண்ணியமாகவும், கட்டுப்பாடுடனும் அர்த்தால் நடத்தப்பட்டது. தோழர்கள் பி எஸ். பன்னீர் செல்வம், ஆர். எஸ். மணி, சி. கே. வெங்கிடராமன் கைது செய்யப்பட்டனர்.

அரக்கோணம்

அரக்கோணத்தில் ஹர்த்தால் மிக வெற்றிகரமாக நடைபெற்றது. பஸ் ஜட்கா வண்டிகள் ஓடவில்லை. சர்வகட்சி ஊர்வலமும், மாலையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது; போலீஸ் பாதுகாப்பும் அதிகமாக இருந்தது. தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி உள்ளிட்ட 7 பேர் கைதாயினர்.

தேனியில் தடியடிப் பிரயோகம்

60 தோழர்களுக்கு மேல் கைது

19—2—56 காலை, நகரில் 144 தடையுத்தரவு சர்க்காரால் போடப்பட்டது. இவ்வூரிலுள்ள ஊழியர் காங்கிரஸ், நகர காங்கிரஸ் கமிட்டி முதலியவர்களின் முயற்சியால் தடையு உத்தரவு போடப்பட்டது.

20—2—66 காலையில் சர்வகட்சி கூட்டணியினுல் தடை உத்தரவை மீறுவதாக அறிக்கை வெளியிடப்பட்டது. தடை உத்தரவை மீறி ஊர்வலம் வந்தார்கள்.

12 மணி வரை 61 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ஊரில் முழு வேலை நிறுத்தம் நடைபெற்றது. ஜின்னிங் பாக்டரி, அரிசி மில், முதலியவைகள் மூடப்பட்டு விட்டன. எவ்விதமான பலாத்காரமும் நடைபெறவில்லை. கூட்டத்தைக் கலைக்க 2 முறை தடியடிப் பிரயோகம் நடைபெற்றது.

வாணியம்பாடி

... இங்கு கடைகள் மூடப்பட்டன; தொழிற்சாலைகள் அடைப்பட்டன; பள்ளிக்கு மாணவர்கள் செல்லவில்லை; பஸ்கள் வண்டிகள் ஓடவில்லை. நகரில் ஏற்கனவே சமூகக் குழப்பம் காரணமாக 144 தடை இருந்து வருவதால் பொதுக் கூட்டம், ஊர்வலம் நடைபெற இயலவில்லை. மாலை, காந்தி நகர் எம். பி. வடிவேல் இல்லத்தில் தமிழ் நாடு எல்லைப் பாதுகாப்பு கமிட்டி சார்பில், திரு. வி. எஸ் விஸ்வநாதம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். பி சத்தியம் பேசினர். கூட்டத்தில், தமிழ் நாடு எல்லையை மீட்க உறுதி எடுத்துக்கொள்ளப்பட்டது.

நெல்லிக்குப்பம்

இங்கு எல்லோரும் கடையடைப்பு செய்தனர்; கொடிகால் வேலை செய்பவர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்; ஆலையில் பகல் வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்து போராட்டத்திற்கு ஆதரவு தந்தனர்; பல மாணவர்கள் பள்ளி செல்லாததால் பகல் 2 மணிக்கு மேல் பள்ளி மூடும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது. அமைதியாக போராட்டம் நடந்து நலமாக முடிந்தது.

பெரியகுளம்

19—2—56-ல் சர்வகட்சிக் கூட்டணியின் தலைவர் உட்பட சுமார் 50 பேருக்குமேல் கைது செய்யப்பட்டார்கள்.

20—2—56 காலையிலிருந்து அமைதியான முறையில் கடையடைப்பையும், மற்ற பொதுவேலை நிறுத்தத்தையும் கூட்டணியின் தோழர்கள் நடத்தினர். தோழர் மீ. சு. இளமுருகு உட்பட சுமார் ஐம்பது பேர் சுற்றுப்புறங்களிலிருந்தும் கைதாகியுள்ளனர்.

தாமரைக்குளம்

செட்டியேரியிலிருந்து ஊர்வலம் துவங்கி முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று, 11-30 மணியளவில் முடிவடைந்தது. பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டன; பெரும் அளவில மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லவில்லை. சுரங்கப் பகுதிகளில தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை.

19—2—56 இரவு 11-30 மணியளவில் கோ. சிவப்பெருமான் (தி.மு.க. செயலாளர்) ரெ. இராமசாமி (சுரங்கத் தொழிலாளர் சங்கம்) இருவரையும் போலீசார் கைது செய்து ரிமாண்டில் வைத்தனர்.

சிறுவந்தாடு

இவ்வூரில் அர்த்தால் அமைதியாய் வெற்றிகரமாய் நடத்தப்பட்டது. வளவனூரில் உள்ள மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 175 பேர் பள்ளிக்குச் செல்லாதது குறிப்பிடத்தக்கது.

பூவாளூர்

இங்கு பொதுவேலை நிறுத்தமும்—கடையடைப்பும் அமைதியாக நடைபெற்றது. நான்கு தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கன்னிவாடி

இங்கு ஓட்டல்கள், துணிக்கடைகள் முதலானவைகள் கடையடைத்துக் கிடந்தன. பள்ளிச் சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை.

மாயூரம் வட்டத்தில் பொது வேலைநிறுத்தம்

19—2—56 இரவு 11 மணிக்கு செம்பனார்கோயில் தி. மு. கழகத் தோழர் டி. பி. ஆறுமுகம் அவர்களை பொது வேலைநிறுத்தத்தை முன்னிட்டு பெரம்பூர் போலீசார் கைது செய்து காவலில் வைத்தனர்.

குத்தாலம்—திருவாவடுதுறை

20-ந் தேதி காலை 10 மணிக்கு குத்தாலம், மேக்கிரிமங்கலம், திருவாவடுதுறை ஆகிய ஊர் தி. மு. கழகத் தோழர்களான எம். தம்புசாமி, ஏ. கலியமூர்த்தி, ஜி. குப்புசாமி, என். பி. ராசு, எஸ். சம்பந்தம், எம். அப்துல் ஹக் கே. எஸ். கண்ணன், வி. ராமதாஸ் ஆகிய எட்டு பேரும் கைது செய்யப்பட்டு மாயூரம் போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தலைஞாயிறு—பட்டவர்த்தி

பிப்ரவரி 20—பொது வேலை நிறுத்த நாளான இன்று மாயவரம்—மணல்மேடு பஸ்ஸை நிறுத்த முயற்சித்ததாகக் கூறப்பட்டு தலைஞாயிறு தி. மு. கழகத் தோழர்கள் வி. என். சந்திரதாசன், என். உத்திராபதி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த சிலரும் ஏனைய கட்சியினர் சிலரும் மொத்தம் 10 பேர் கைது செய்யப்பட்டு மணல்மேடு போலீஸ் ஸ்டேஷனில் காவலில் வைக்கப்பட்டனர்.

மாயூரம்

சர்வ கட்சிக் கூட்டணியின் ஆணைக்கிணங்க 20-ந் தேதி மாயூரம் நகரில் அமைதியாக ஹர்த்தால் நடந்தேறியது; எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன.

அன்று மாலை முசாபரி பங்களாவிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக நகர்ப் பூங்காவை வந்தடைந்தது. பின்னர் உறுதி ஏற்கப்பட்டு கலைந்தது.

கல்லாவி

இவ்வூரில் முழு வேலை நிறுத்தம் நடைபெற்றது. சிற்றுண்டிச்சாலைகள், மளிகைக் கடைகள், சிறு வியாபாரம் செய்யும் கடைகள், முடி திருத்தும் நிலையங்கள், போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை அனைத்தும் மூடிக்கிடந்தன. கல்குவாரி கல் வெட்டும் கூலி ஆட்கள், மின்சார கம்பங்கள் நடும் தொழிலாளர்கள் அனைவரும் அர்த்தாலை அனுசரித்தனர். பள்ளியில் படிக்கும் 400 மாணவர்களும் பள்ளிக்குச் செல்லவில்லை.

திண்டிவனம்

சுமார் 20,000 மக்களைக் கொண்ட ஒரு ஊர்வலம் வந்தது; வியாபாரிகள், பஸ் லாரி சொந்தக்காரர்கள் பொதுவேலை நிறுத்தத்தில் பங்குகொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் கூட்டணியின் உறுதி மொழி வாசிக்கப்பட்ட பின் கூட்டம் அமைதியுடன் கலைந்தது.

வேலாயுதம்பாளையம்

தி. மு. கழகத் தோழர்கள் டி. பி. மூர்த்தி, வி. கே. இராசு, டி. ஆர். முத்துச்சாமி, கம்யூனிஸ்ட் தோழர்கள் கே. கருப்பையா, எஸ். சிவராமன், சோஷலிஸ்ட் தோழர் வி. வாசுதேவன், இலக்கிய மன்ற எஸ் முருகையன், தொழிற்சங்க டி. பி. வடிவேல் ஆகியவர்கள் 19—2—56-ல் கைதாயினர்.

கைதானோர் எண்ணிக்கை வளர்கிறது

பலர் மீது வழக்கு

பிப். 29—பொது வேலைநிறுத்தத்தை ஒட்டி தமிழகமெங்களும் கைது செய்யப்பட்ட தோழர்களின் எண்ணிக்கை விபரம் வளர்ந்துகொண்டே இருக்கிறது. கைதானோர் பற்றிய விபரங்கள் கிடைத்தவண்ணமுள்ளன.

கைதானோரில் மிகப் பெரும் பகுதியினர் தி. மு. கழகத் தோழர்களாவர்.

பலர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சிலர் கைது ஆகி சில மணி நேரத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். விபரங்களைச் சுருக்கித் தந்திருக்கிறோம் :—

தியாகதுருகம்

இவ்வூரில் சர்வகட்சி கூட்டணியின் சார்பில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின் காரணமாகத் தி. மு கழகத் தோழர்கள் மு. இரகுராமன், இரா. இராசகோபாலன், கோ. இராமாநுசன், ம. நாராயணன், பொ. இராமகிருட்டிணன், பெ. இரத்தினம், கோவிந்தசாமி, பொ. சதாசிவம், கு பச்சைமுத்து, அ. பழனிவேலன், அல்லாபக்ஷி, வை. முத்தையன், மு. பச்சையப்பன், ப. ச. து. வேணு, வெ. இராமசாமி ஆகியோரும் சோஷலிஸ்டுத் தோழர்கள் வே. நாராயணன், சி. கிருட்டிணன், வி. இராமதாஸ், வி. வேணு ஆகியோரும் கூட்டணி ஆதரவாளர் தோழர் குமரவடிவேலு என்பவரும் ஆக 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

நாமக்கல்

19—2—56 இரவு 10 மணிக்கு, தி. மு. க. தோழர்கள் கா பெருமான், என். பி. செல்லப்பன், ந. பத்மராசு, பி. குப்புசாமி, எஸ். பி. காளிசாமி ஆகியோரும், தமிழரசுத் தோழர்கள் நா. ராசன், ஆர். இராமசாமி ஆகியோரும், கம்யூனிஸ்டுத் தோழர்கள் என். எஸ். பழனியப்பன், கே. பழனிச்சாமி, கே. வி. இராமசாமி, எம். எல். ஏ., ஆகியோரும், சோஷலிஸ்டுத் தோழர்கள் பி. எம் கிருஷ்ணன், எஸ் சீனிவாசன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

கீழப்பாவூர்

பிப். 20 காலை 8 மணிக்கு கடை வீதியில் சென்றுகொண்டிருந்த தோழர் சிவபெருமாள் கைது செய்யப்பட்டார் ; 9 மணிக்கு ஊர்வலம் வந்த தோழர்கள் அரு. இராமநாதன், வி. மா. முத்தரசு, ச. தங்கவேல், ச. லக்குமணன், கு. இரங்கநாதன், கு. கிருட்டிணன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

நகரின் பல இடங்களிலும் அமைதியான முறையில் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.

இராமநாதபுரம் - புதூர்

19—2—56 இரவு 9 மணிக்கு, தி. மு. கழகத் தோழர்கள் என். பெரியசாமி, ஆர். எம். பழனிமுத்து, ப. ஆறுமுகம், இரா. வெங்கடாசலம, எம். நடேசன், சின்னத்தம்பி, வெங்கடாசலம், வரதராசன் ஆகியோர் சேந்தமங்கலம் சப்-இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டனர்.

சேந்தமங்கலம்

19—2—56 இரவு 10 மணிக்கு, தி. மு. கழகத் தோழர்கள் எஸ் வி. ரங்கசாமி, எஸ். ஏ. கைனியப்பன், எஸ். ஏ. நடராசன், எஸ். ஆர். பெரியசாமி ஆகியோரும், கம்யூனிஸ்டுத் தோழர்கள் சோ இராமசாமி, எஸ். இராசு ஆகியோரும் சேந்தமங்கலம் சப்-இன்ஸ்பெக்டரால் கைதாகியுள்ளனர்.

பெரியகுளம்

பெரியகுளம், தேனி, கீழ்மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் 300-க்கு மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்டவர்கள் ஊர்வாரியாக — பெரியகுளம் 24 ; தேனி 117; கீழ்மங்கலம் 112; தேவதானப்பட்டி 31; மற்ற சிறு ஊர்களிலிருந்தும் பலர்.

கைது செய்யப்பட்டவர்களில் தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையினர். பெரியகுளம், வடுகப்பட்டி, மேல்மங்கலம், கீழ்மங்கலம், தேவதானப்பட்டி, தேனி ஊர்களின் தி. மு. கிளைக் கழகச் செயலாளர்கள்—துணைச் செயலாளர்களும்—கிளைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினருமாவர்.

எழுமலை

20—2—56 காலை $6\frac{1}{4}$ மணிக்கு. தோழர்கள் எஸ். தங்கராசு, எஸ். காசிநாதன், எம். செல்லையா, ஏ. வாசிமலை ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

$11\frac{1}{4}$ மணிக்கு தோழர்கள் ஆர். சின்னச்சாமி, பி. வேலுச்சாமி. எஸ். சதுரகிரி முதலியோர் கைது செய்யப்பட்டனர்.

$11\frac{1}{2}$ மணியளவில், தோழர்கள் கே. பரமசிவம், எம். ஆர். சேகர், கே. சுப்பிரமணியம், கே. ஆனந்த கிருட்டிணன் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாரண்ட அள்ளி

பிப். 20-ல், தி. மு. கழகத் தோழர்களான எம். என். தங்கமுத்து, எம். சி. இலக்குமணன், கே. கோவிந்தராசன், எம். ஜி. சுப்ரமணியம், எம். கே. ராசா, எம். ராஜமாணிக்கம், எப். சாப்ஜான், டி. சுந்தரம் ஆகியோரும், தமிழரசு கழகத் தோழர்கள் டைலர் இராம கிருஷ்ணன், மா. அ. முத்து, எம். ஆர். நாராயணசாமி, ஆர். சுந்தரேசன், ஆகியோரும், கம்யூனிஸ்டுத் தோழர் வி. ஜி. இராசனும் கைது செய்யப்பட்டனர்.

துறையூர்

சர்வகட்சிக் கூட்டம் திரு. பி. அரங்கசாமி எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் பிப். 19-ந் தேதி மாலை துறையூர் அரண்மனை பிள்ளையார் கோவில் முன் நடைபெற்றது. தோழர்கள் பி. எஸ். முனுசாமி, மருதமுத்து (தி. மு. க.), கிருஷ்ணமூர்த்தி (சோ), சுந்தரம் (கம்.) ஆகியோர் அர்த்தாலின் நோக்கம் பற்றி விளக்கிப் பேசினர். அன்றிரவு 2 மணிக்கு தி. மு. கழகத் தோழர்களான எம். பி. பண்டரிநாதன், கே. கலியபெருமாள், பி. சண்முகம், பி எஸ். முனுசாமி, கே. தர்மலிங்கம், கே. மருதமுத்து, எம் சோமசுந்தரம் ஆகியோரும், சோஷலிஸ்டுத் தோழர்கள் கே. கிருஷ்ணமூர்த்தி, டி. மருதை, டி. எஸ். ரத்னகிரி, சடையபிள்ளை ஆகியோரும், கம்யூனிஸ்டுத் தோழர்கள் சுந்தரம், கோவிந்தன், பழனியப்பன் ஆகியவர்களும் கைது செய்யப்பட்டனர்

பிப்ரவரி 20ல், துறையூர் முழுவதும் கடையடைப்பு வேலைநிறுத்தம் பூரணமாக நடைபெற்றன 30 தோழர்களைப் போலீசார் கைது செய்து விடுவித்துவிட்டனர். அன்று மாலை தோழர்கள், பி. அரங்கசாமி எம். எல். ஏ, வழக்கறிஞர் சிவசங்கரன் ஆகியோர் தலைமையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று நகரின் முக்கிய தெருக்களின் வழியாக வந்து, அரண்மனை பிள்ளையார் கோவில் முன்பு திரு அரங்கசாமி எம். எல். ஏ., அவர்களால் உறுதிமொழி வாசிக்கப்பட்டு கலைந்தது. 19-ந் தேதி இரவு கைது செய்யப்பட்டவர்கள் துறையூரில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

* * *

தாத்தையங்கார்பேட்டை

தோழர்கள் எம். பி. முத்துக்கருப்பன், எம். எஸ். என். ராசன், டி. கே. குப்பையன் ஆகிய தி. மு. கழகத் தோழர்கள் 19-ந் தேதி இரவு கைது செய்யப்பட்டு துறையூரில் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். பிப். 20-ல் ஊர்முழுவதும் கடையடைப்பும் வேலைநிறுத்தமும் பூரணமாக நடைபெற்றது.

* * *

மேட்டுப்பாளையம்

தி. மு. கழகத் தோழர்களான ராசு, பெருமாள் ஆகியோர் 19-ந் தேதி கைது செய்யப்பட்டு துறையூரில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பிப். 20-ல் ஊர் முழுவதும் கடையடைப்பும், வேலைநிறுத்தமும் பூரணமாக நடைபெற்றன.

* * *

வயிரிசெட்டிப்பாளையம்

பிப்ரவரி 20ல், பூரண கடையடைப்பு நடைபெற்றது. தி மு. கழகத் தோழர்கள் சுமார் 60 பேரை உப்புலியபுரம் போலீசார் கைது செய்து பின்னர் விடுவித்தனர்.

இராமநாதபுரம்

இங்கிருந்து இரண்டு கல் தொலைவுள்ள சோதமங்கலத்தில், பிப். 20 பொதுவேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ள இருந்த கீழ்க்கண்ட இராமநாதபுரம் தி. மு க உறுப்பினர்கள் 19-ந் தேதி இரவு 9 மணிக்கு தி. மு. கழக நிலையத்தில் கமிட்டி கூட்டம் நடந்துகொண்டிருந்தபொழுது கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட தோழர்கள் :— என். பெரியசாமி, செயலாளர். ரா. மெ. பழனிமுத்து, மாவட்ட உறுப்பினர். பா. ஆறுமுகம், மெ. நடேசன், ரா. வெங்கடாசலம், பி. சின்னதம்பி, வரதராசு, எம். வேங்கடாசலம்.

அய்யம்பாளையம்

அய்யம்பாளையத்தில் 20-ந் தேதி அர்த்தால் வெகு வெற்றிகரமாக நடைபெற்றது. தி. மு. கழகத் தோழர்கள் 50 பேர் 20-ந் தேதியன்று பகல் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

இராசிபுரம்

19—2—56 இரவு சுமார் 10-மணிக்கு, தி. மு கழகத் தோழர்கள் இரா. தேசி, க. கா. வேலாயுதம், வி. கே. இராமசாமி, துரைசாமி, ஆர். பி. கிருஷ்ணன், (இராசிபுரம் நகராண்மை உறுப்பினர்) ஆகியோரும், தமிழரசு கழகத் தோழர்கள் க. வெ. நடராசன், த. ந. ராஜாராம், க. மாணிக்கம், க. சுபான், க. ப. தியாகராசன் ஆகியவர்களும், கம்யூனிஸ்டுத் தோழர்கள் ஏ. எம். சுப்பிரமணியம், ஆர். பி துரைசாமியும் கைது செய்யப்பட்டனர். பிப். 20 பொது வேலை நிறுத்தம் இவ்வூரில் அமைதியாக நடைபெற்றது.

கீழ்பெண்ணத்தூர்

கீழ்பெண்ணத்தூர் தி. மு. கழகத் தோழர்கள் 20 பேர் பிப்ரவரி 20-ல் பொதுவேலை நிறுத்தத்தை ஒட்டி கைது செய்யப்பட்டு திருவண்ணமலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்.

திருவண்ணமலை நகர தி. மு. கழகச் செயலாளர் குமாரசாமி கைதாகி வந்துள்ள தோழர்களைக் கவனித்து வருகிறார். (நம்நி.)

மாவட்ட அதிகாரியின் அத்துமீறிய போக்கு

மதுரையில் அர்த்தால் வெற்றி விபரங்கள்

மதுரை, பிப். 21—

யூனியன் கிருத்தவ உயர்நிலைப்பள்ளி மாணவர் ஒருவர் பள்ளி அருகில் உள்ள பஸ் நிற்குமிடத்தில் நின்றுகொண்டு, 'தன்மானமுள்ள தமிழர்களே! பஸ்களில் ஏறாதீர்!' என்று கூறியதைக் கேட்ட ஒரு டி. வி. எஸ். பஸ் கண்டக்டர் கீழிறங்கி வந்து, அந்த மாணவர் முகத்தில் எச்சிலைக் காரி உமிழ்ந்து கலாட்டா செய்திருக்கிறார். அதன் காரணமாக ஆத்திரப்பட்ட மக்கள், டி. வி. எஸ். பஸ்களைத் தாக்க வேண்டுமென முயற்சித்திருக்கிறார்கள். சர்வகட்சிக் கூட்டணியினர், ஆத்திரங்கொண்ட மக்களைக் கட்டுப்படுத்தி கலவரம் ஏதும் நிகழாமல் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

மாவட்ட அதிகாரி வரம்பு மீறி, மக்களுக்கு ஆத்திரமூட்டக் கூடியவகையில் நடந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

பிப்ரவரி 19-ந் தேதியன்று திலகர் திடலில் சர்வகட்சிக் கூட்டம் நடைபெற்று முடிந்ததும், மாவட்ட அதிகாரி (கலெக்டர்) பிப். 20-ல் அர்த்தால் கிடையாதெனவும், கூட்டம், ஊர்வலம் கிடையாதெனவும், ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கியிருந்தும் போலீஸ் லாரியில் அமர்ந்துகொண்டு ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கச் செய்திருக்கிறார்.

மாவட்ட அதிகாரியும், போலீசாரும், டி. வி எஸ். பஸ் முதலாளிகளும் எத்தனை முயன்றும் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது.

நகர் முழுதும் நேற்று நாம் செய்தி தந்திருந்தபடி, வெகு அமைதியாகவும், சிறப்பாகவும் அர்த்தால் நடைபெற்றிருக்கிறது.

பிப். 20-ந் தேதி மாலையில் நகரின் முக்கிய வீதியான டவுன் ஹால் ரோடிலிருந்து மேலமாசி வீதி வழியாக, மாபெரும் ஊர்வலம் புறப்பட்டுச் சென்று திலகர் திடலை அடைந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

டி. வி. எஸ். நிர்வாகிகள், மாவட்ட அதிகாரி இவர்களது போக்கைக் கண்டித்து தோழர்கள் எஸ். முத்து, வி. கே. தாஸ், சசிவாணம் முதலியோர் பேசியதும், தமிழர் உறுதி மொழி கூட்டத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

நகரின் அமைதி கெடாமலும், அர்த்தால் வெற்றிகரமாக நடைபெறுவதற்காகவும் நகரின் சர்வகட்சிக் கூட்டணியினர் வெகுவாகப் பாடுபட்டிருக்கின்றனர்.

ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி பி. ரெங்கசாமி (நாயுடு), பார்த்தசாரதி (நாயுடு). வழக்கறிஞர்கள் தர்மராஜ் சந்தோஷம், பாகுலேயன், தோழர்கள் பி. டி. ஆர் பழனிவேல் ராஜன், (பி. டி. இராசன் அவர்களது குமாரர்), எஸ். முத்து (தி. மு க.), வி. கே. தாஸ், (பி. சோ.), சவுந்தரம் (சோஷ). ரங்கநாதன் (செட்டியார்), (தமிழரசுக் கழகம்,) குருசாமி (கம்.) ஏ வேணுகோபால் ஆகியோர் நாள் முழுதும் நகரைச் சுற்றிச் சுற்றி வந்து அமைதி காத்தனர். ஊர்வலத்தை முன்னின்று நடத்தினர்.

மாலையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட அதிகாரியின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்குப் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் அவரை உடன் ஊரிலிருந்து மாற்றிவிட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

திருத்தணியில் பொது......

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அடைபட்டு, திருத்தணி நகரமே செயலற்றுக் கிடந்தது.

மார்க்கெட்டிலுள்ள கடைகள், கறி கடைகள் எல்லாம் மூடிக்கிடந்தன.

தோழர் ந. அ. ரசீத், (தி.மு.க.) தோழர் ந சுப்பிரமணியம் (வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு செயலாளர்) காலை 4 மணி முதல் தொண்டர்களுடன் நகரைச் சுற்றிச் சுற்றி அமைதி காத்தனர்.

சரியாக காலை 9 மணியளவில் திருத்தணியில் தமிழர்களின் பிரமாண்டமான ஊர்வலம் புறப்பட்டு திருத்தணி நகரத்து வீதிகளிலே பவனி வந்தது.

ஏறத்தாழ 5,000-த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் ஊர்வலத்தைத் திருத்தணி நகரசபைத் தலைவர் திரு. டி. சரவணய்யா அவர்கள் தலைமை வகித்து நடத்திச் சென்றார்.

ஊர்வலத்தில், 'மத்திய சர்க்காரே, தமிழர்களுக்கு நீதி வழங்கு' 'வடநாட்டு ஏகாதிபத்தியம் ஒழிக,' 'தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கே,' 'சித்தூர் மாவட்டத் தமிழர்களைத் தமிழகத்தோடு சேர்த்துவிடு,' 'சென்னை ராஜ்ஜியத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடு,' 'தட்சிணப் பிரதேசம் அமைக்கவிடமாட்டோம்,' என்று முழங்கிக்கொண்டு வந்தார்கள்.

பகல் 12 மணிக்கு ஊர்வலம் நகரத்தின் பொது இடத்தில்—மார்க்கெட் எதிரில் வந்துகூடியது. கூட்டத்தில் திரு. டி. சரவணய்யா, திரு ஏ முனுசாமி, ந. அ. ரசீத் ஆகியோர் பேசினர். சர்வகட்சிக் கூட்டணியின் உறுதிமொழியை வாசித்துக்காட்டி எல்லோரும் உறுதிமொழியேற்ற பிறகு கூட்டம் கலைந்தது.

குறிப்பு :—இன்று போக்குவரத்து நின்றுகிடந்த வழிகள்—அரக்கோணம், திருப்பதி போகும் பஸ்கள் ; திருப்பதி—அரக்கோணம் ; காஞ்சிபுரம்—காளத்தி; திருத்தணி—சித்தூர்; திருத்தணி—சென்னை ; திருத்தணி—நாகலாபுரம்; திருத்தணி—மின்னல்; திருத்தணி—சோளிங்கர் ஆகியவனவாகும்.

திருமணம்

24—2—56 காலை $8\frac{1}{2}$ மணிக்கு, பெங்களூர் திம்மையாரோடு (கண்டோன்மெண்ட் புகைவண்டி நிலையத்திற்கு அருகில்), 'கோவிந்த செட்டி சத்திரத்தில்', தோழர் பி. கே. இராமசாமி—தோழியர் பி. கமலா வாழ்க்கை ஒப்பந்த விழா, பேராசிரியர் தண். கி. வேங்கடாசலனர் தலைமையில் நடைபெறும். தோழர் இராம அரங்கண்ணல் வாழ்த்துரை வழங்குவார்.

திரு. க. நாகைநாதர் நினைவு நாள்

அன்புடையீர் !

எனதருமைத் தந்தையார், திரு. க. நாகைநாதர் அவர்கள் இரங்கற்கூட்டம் 23—2—56 வியாழன் மாலை 5 மணிக்கு, நெ. 10, கெனட்ஸ் லேனிலுள்ள இலங்கை மகாபோதி சங்கத்தில் (எழும்பூர் இரயிலடி எதிரில்) நடைபெறும்.

அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

தாங்கள் அனைவருடன் கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
சத்தியவாணிமுத்து

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.